ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2455/08 - 2025 සැප්තැම්බර් මස 22 වැනි සඳුදා - 2025.09.22

2455/08 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 94125 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் களனி,பொலேகல்ல, மானெல்வத்தவில் அமைந்துள்ளதுமான நாகானந்த இன்டர்நஷனல் இன்ஸ்டிடியூட் போ புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2015, திசெம்பர் 07 ஆந் திகதிய 1944/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான I ஆம் அட்டவணையை, அட்டவணை I மற்றும் அட்டவணை II இன் ‘நிபந்தனை’ என்னும் தலைப்பின் கீழான உள்ளடக்கங்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. நாகானந்த இன்டர்நஷனல் இன்ஸ்டிடியூட் போ புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) ஆனது, பின்வருவன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துடன் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது -

    (அ) குறைந்தபட்சம் 90 திறமை மதிப்பீடுகளுடன் பௌத்த கற்கைகளில் இளங்கலைமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 5) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த.

(உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களுள் ஒன்றாக பௌத்தம்/ பௌத்த நாகரிகம்/ பாளி/ சமஸ்கிருதம் ஆகியன உள்ளடங்கலாக ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகளை குறைந்தபட்சம் நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஆ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் பௌத்த கற்கைகளில் இளங்கலைமாணி (சிறப்பு) (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகளை குறைந்தபட்சம் நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) குறைந்தபட்சம் 25 திறமை மதிப்பீடுகளுடன் பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 8) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டமொன்று,

(i) பௌத்த கற்கைகளில் 30 திறமை மதிப்பீடுகளுக்கு உள்ளடங்கலாக, அல்லது

(ii) இயைபான பாடப்பரப்பில் 30 திறமை மதிப்பீடுகளுக்கு சமமான முந்தைய கற்றல்/ தொழில் தகைமைகளுடன், அல்லது

(2) 1(i) அல்லது 1(ii) இற்கு சமமாக இயைபான பாடப்பரப்பில் தகைமையொன்று

(ஈ) குறைந்தபட்சம் 30 திறமை மதிப்பீடுகளுடன் பௌத்த கற்கைகளில் முதுகலைமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 9) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டமொன்று,

(i) பௌத்த கற்கைகளில் 30 திறமை மதிப்பீடுகளுக்கு உள்ளடங்கலாக, அல்லது

(ii) இயைபான பாடப்பரப்பில் 30 திறமை மதிப்பீடுகளுக்கு சமமான முந்தைய கற்றல்/ தொழில் தகைமைகளுடன், அல்லது

(2) 1(i) அல்லது 1(ii) இற்கு சமமாக இயைபான பாடப்பரப்பில் தகைமையொன்று, அல்லது

(3) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து ஏதேனும் இயைபான பாடப்பரப்பில் இளமாணி பட்டமொன்றும் HEI இன் கல்விசார் அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட போட்டிப் பரீட்சையொன்றில் சித்தியும், அல்லது

(4) மியன்மார், தம்மாச்சாரி தகைமைகளின் பூர்த்தி, அல்லது

(5) இலங்கை கீழைத்தேய கற்கைகள் சமூக இறுதி பரீட்சையில் சித்தியடைதல்.

(உ) பௌத்த கற்கைகளில் முதுதத்துவமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 11) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(1) பௌத்த கற்கைகளில் குறைந்தபட்சம் 30 திறமை மதிப்பீடுகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6 இளமாணி சிறப்புப் பட்டமொன்று,

(2) தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 30 திறமை மதிப்பீடுகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6 இளமாணி சிறப்புப் பட்டமொன்று மற்றும் தகுதிகாண் பரீட்சையொன்றின் வெற்றிகரமான பூர்த்தி, அல்லது

(3) 0-4 என்னும் அளவுத்திட்டமொன்றினால் குறைந்தபட்சம் 3 தரச் சராசரி புள்ளியுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6 இளமாணி சிறப்புப் பட்டமொன்று மற்றும் அதே அல்லது தொடர்புடைய துறையில் இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6 இற்கு சமமான 30 திறமை மதிப்பீடுகளின் பூர்த்தியின் பின்னர் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையொன்றின் வெற்றிகரமான பூர்த்தி, அல்லது

(4) இயைபான துறையில் இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 7 அல்லது அதற்கு மேலான தகைமை யொன்று.

(2) ஓராம் பந்தியின் கீழ் ஏற்புடையற்பாலதான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகள் (திருத்தப்பட்டவாறாக) இயைபான 05.06.2023 ஆந் திகதிய NSHE சுற்றறிக்கை இல. 02/ 2023 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக 01.07.2023 ஆந் திகதியில் வலுவுக்கு வருதல் வேண்டுமென இத்தால் குறித்துரைக்கின்றேன்.

(3) மேலேயுள்ள சுற்றறிக்கை வலுவுக்கு வருவதற்கு முன்னர் அனுமதிக்கப்படும் எவரேனும் மாணவர் அனுமதியின் போது, ஏற்புடையற்பாலதான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளின் அடிப்படையில் சொல்லப்பட்ட இளமாணி பட்டத்தினைத் தொடருதல் வேண்டுமென இத்தால் தெளிவுபடுத்துகின்றேன்.

2. நாகானந்த இன்டர்நஷனல் இன்ஸ்டிடியூட் போ புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| பௌத்த கற்கைகளில் இளங்கலைமாணி | பீஏ (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் இளங்கலைமாணி சிறப்பு | பீஏ சிறப்பு (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | பீஜீ டிப் (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் முதுகலைமாணி | எம்ஏ (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் முதுதத்துவமாணி | எம்பில் (பௌத்த கற்கைகள்) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, செத்தெம்பர் 18.

EOG 09 - 0211

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.